மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

தார்ச் சாலை

***6095—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தொப்பூர் முதல் கோமகாடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐவகை நிலமும் சூழ, அழகோடு பூத்திட்ட அன்னைத் தமிழ் மண்ணை அறிவால், ஆற்றலால் அரசாட்சி செய்து, அண்டை மாநிலம் முதல் அயல் நாடுகள் வரை புகழாரம் சூட்ட வைத்த புத்தொளியே! காவேரி, முல்லைப் பெரியாறை மீட்டுத் தந்து, உழவன் வீட்டுப் பிள்ளைகளும் உலகத்தர கல்வி பெற, பாமர ஏழைக்கும் பசுமை வீடு கட்டித் தரும் பாசப் பெட்டகமே; முப்பொழுதும் மக்களுக்கு தம் வாழ்வை ஒப்படைத்து வாழுகின்ற மூலவரே; மக்கள் முதல்வர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா, தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய வினாவுக்கான விடையை அளிக்க விழைகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சியில், தொப்பூர்–கோமகாடு வரை உள்ள 1,400 மீட்டர் சாலைப் பணி ஊராட்சி ஒன்றியப் பொது நிதி மற்றும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான தமிழ்நாடு

2014 டிசம்பர் 5]

குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டமான 'தாய்' திட்டம்மூலம் 23.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்து முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கம்பம்பட்டி ஊராட்சியில் பாப்பிரெட்டியூர், காட்டுவளவு, P.W.D. கால்வாய் வழியாக கோமகாடு வரை மண் சாலையாக இருப்பதை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமென்ற மக்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்ற, மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சியில் (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் வேறு ரோட்டை கேட்கிறீர்களா? முதலில் நீங்கள் கேட்ட சாலையை ஒரு அற்புதமான திட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "தாய்" திட்டம் மூலமாக செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லாமல் அடுத்த சாலைக்கு வந்துவிட்டீர்கள். நான் அந்தச் சாலையைத் தான் கேட்கிறீர்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அவசியம் இருப்பின், தேவையான கருத்துரு பெறப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அருமையான, அற்புதமான 'தாய்' திட்டத்தைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். தமிழகத்தில் 12,524 ஊராட்சிகள் இருக்கின்றன;

79,394 குக்கிராமங்கள் இருக்கின்றன. குக்கிராமங்களில் இருக்கக்கூடிய சாலை வசதி, சுடுகாடு மேம்பாடு, குடிநீர் வசதி, குடிநீர் மேல்நிலைத் தொட்டி போன்ற பல வசதிகள் செய்து கொடுக்கும் 'தாய்' திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் தந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதே பதிலிலே—பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த திருமதி. தமிழிசை சௌந்தரராசன் அவர்கள்கூட, நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும், ஒரு மாதிரி கிராமம் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலேகூட, நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம், Sansad Adarsh Gram Yojana என்ற திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சிகள்தான் எடுத்துள்ளார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே—குக்கிராமங்கள் வாரியாக—12,524 ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்களை எடுத்து, 'தாய்' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுத் திட்டத்தில் இதற்காக தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் எடுத்துச் செய்ய வேண்டும். அதிலேகூட கிட்டத்தட்ட 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசின் திட்டத்தின்கீழ் 2024 ஆம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட 456 கிராமங்கள்தான் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் குக்கிராமங்கள் வாரியாக எடுத்துக்கொள்ளக்கூடிய திட்டத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருடத்திற்கு ரூ.750 கோடி நிதியை ஒதுக்கி ஒவ்வொரு கிராமத்தையும் மேம்பாடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே கண்டிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 'தாய்' திட்டத்தின்கீழ், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் என்ற பாகுபாடில்லாமல் அனைத்துக் கிராமங்களும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பூர் ஊராட்சியிலே 'தாய்' திட்டத்தின்மூலம் தார்ச் சாலை அமைத்துக் கொடுப்பதை வரவேற்கிறேன். மேலும், கம்பம்பட்டி

2014 டிசம்பர் 5]

ஊராட்சியில் சோழியானூர்காட்டுவளவு, கருமன்காடு, சாவூர் காட்டுவளவு, கணபதியூர் போன்ற பகுதிகளில் உள்ள சாலைகள் மண் சாலைகளாக இருக்கின்றன. இந்த மண் சாலைகள் தார்ச் சாலைகளாக அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கனவினை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியிலே தமிழகத்தில் ஊராட்சிப் பகுதிகளில் 28,628 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.3,863 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்றரை ஆண்டுகால பொற்கால ஆட்சியில் தமிழக ஊராட்சிப் பகுதிகளில் இதுவரை 35,602 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.6,288 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியிலே ரூ.2,425 கோடி அளவிற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை, அப்பகுதியில் அவசியம் இருப்பின், கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்த்துதலுக்கும், வணக்கத்திற்கும், வழிபாட்டுதலுக்கும் உரிய, போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அருப்புக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், அதாவது, பாளையம்பட்டி மற்றும் பாளையம்பட்டி விரிவாக்கப் பகுதிகள் மற்றும் உடையனாதபுரம், வேலாயுதபுரம், கோடம்பட்டி, குருந்தமடம் போன்ற பகுதிகளிலெல்லாம் தார்ச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. மேலும், பழுதடைந்திருக்கிற சாலைகளைச் செப்பனிடுவதற்கும் கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, இப்பணிகளையெல்லாம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

கால்நடை மருத்துவமனை

***36216—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, தெத்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?